<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : CC.No.172/2021**</u>

<u>**வழக்கு சாட்சி PW-1**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொட்டுத்தாய் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | ராமைய்யா | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வல்லராமபுரம் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் வல்லராமபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி மாரியப்பன் அடிக்கடி குடித்து விட்டு, வம்பு செய்வார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 06.00 மணிக்கு நானும், எனது கணவரும் வீட்டில் இருந்தோம். காலை 06.00 மணிக்கு குடிநீர் குழாயில் தண்ணீர் வந்தது. நான் தண்ணீர் பிடிக்க போனேன். எதிரி மாரியப்பனும் தண்ணீர் பிடிக்க வந்தார். அப்போது? எதிரி மாரியப்பன் குடத்தை வைத்து என்னை இடித்து ஏன் தேவடியா தண்ணீ பிடிக்க வாரே என்று அதம்பாதமாக பேசினார். அப்போது நான் எதிரி மாரியப்பனிடம் "அண்ணன் மனைவியை இப்படி தரக்குறைவாக பேசாதே" என்று சொன்னேன். அப்போது எதிரி மாரியப்பன் என்னைப் பார்த்து "என்ன அண்ணன் பொண்டாட்டி, உன்னை இழுத்து விடுவேன்" என்று சொன்னார். "உன் பிள்ளைகள் இங்கு இல்லை. உன்னை என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்று சொன்னார்.

அதன் பின்னர் எதிரிகள் குமார், பொன்னுத்தாய் ஆகியோர்கள் கம்புடன் வந்து, இருவரும் கம்பால் எனது வலது கை மற்றும் பிட்டியில் அடித்தார்கள். எதிரி குமார் எனது பிட்டியில் அடித்தார். அதன் பின்னர் என்னை எதிரி குமார் தூக்கி எறிந்து விட்டார். அப்போது, பக்கத்தில் நின்று கொண்டிருந்த சொர்ணம் எனது வீட்டிற்கு சென்று எனது கணவரிடம் நடந்த விபரத்தை கூறி, எனது கணவர் அங்கு வந்தார். அப்போது எனது கணவரை எதிரிகள் 3 பேரும் கம்பால் வலது கை நடுவிரலில் அடித்தார்கள். அதன் பின்னர், நானும், எனது கணவரும் சேர்ந்தமரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம்.

அதன் பின்னர், எங்களை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள். நான் காவல்நிலையம் சென்று நடந்த விபரத்தை சொன்னபோது, அவர்கள் எங்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள். நானும், எனது கணவரும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து நான் நடவடிக்கை எடுக்க போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL
BABITHA

Digitally signed by J
CHRISTAL BABITHA
Date: 2025.10.09
11:17:12 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No.172/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலு | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | திருமலை | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வல்லராமபுரம் | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லராமபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பொட்டுத்தாய் எனது மனைவி. எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரி என்னுடைய தம்பி. 2வது எதிரி குமார் 1ம் எதிரியின் மகன். 3ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. எதிரிகளுக்கும், எங்களுக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 06.00 மணிக்கு நான் வீட்டில் படுத்திருந்தேன். எனது மனைவி தண்ணீர் பிடிக்க போனார். அப்போது, எதிரி மாரியப்பன் குடத்தை தள்ளிவிட்டு எனது மனைவியை கீழே தள்ளிவிட்டார். எனது மனைவி சத்தம் போட்டதும் நான் போனேன். எதிரி மாரியப்பனிடம் எதற்காக எனது மனைவியை தள்ளிவிட்டாய் என்று கேட்டபோது, எதிரி என்னிடம் "நான் அப்படி தான் செய்வேன், உன்னால் என்ன செய்ய முடியும்" என்று கூறினார். நான் விலக்கி பிடித்தேன். விலக்கி பிடித்தபோது, பொன்னுத்தாய் கம்பு வைத்து என்னுடையட இடது கையில் அடித்தார். இடது கை நடுவிரலில் காயமானது.

காயம்பட்ட எனது மனைவியை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கூட்டிச் சென்றேன். பின்னர், அங்கு நானும், எனது மனைவியும் சிகிச்சை பெற்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 11:17:20 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : CC.No.172/2021</u>
<u>வழக்கு சாட்சி PW-3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாணிக்கம் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | வேலு | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | வல்லராமபுரம் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லராமபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பொட்டுத்தாய் எனது தாயார். அ.சா.2 வேலு எனது தகப்பனார். எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரி என்னுடைய அப்பாவின் தம்பி. 2வது எதிரி குமார் 1ம் எதிரியின் மகன். 3ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. எதிரிகளுக்கும், எங்களுக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் சென்னையில் வேலை செய்து கொண்டிருந்தபோது, எனது அம்மாவையும், அப்பாவையும் எதிரிகள் அடித்து விட்டதாக கேள்விப்பட்டேன். இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.05.2020 அன்று காலை 06.00 மணிக்கு எங்கள் வீட்டின் முன்பு நான் நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் எனது அம்மாவைப் பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால்

சரியல்ல. எதிரி மாரியப்பன் கம்பை எடுத்து எனது அம்மாவின் இடது முழங்கையில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் பொன்னுத்தாய், குமார் ஆகியோர்கள் கையால் எனது அம்மாவை அடித்து கீழே தள்ளினார்கள் என்றால் சரியல்ல. அதை தடுக்கப்போன எனது அப்பாவை எதிரிகள் அசிங்கமாக பேசி, கம்பால் இடது கையில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நானும், இந்திரா, சொர்ணம் ஆகியோர்கள் சத்தம் போடவும் எதிரிகள் எனது அப்பா, அம்மாவை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 11:17:27 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.172/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இந்திரா | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | வேலு | தொழில் | : | மாணவி |
| கிராமம் | : | வல்லராமபுரம் | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லராமபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1 பொட்டுத்தாய் எனது தாயார். அ.சா.2 வேலு எனது தகப்பனார். எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரி என்னுடைய அப்பாவின் தம்பி. 2வது எதிரி குமார் 1ம் எதிரியின் மகன். 3ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. எதிரிகளுக்கும், எங்களுக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் கல்லூரியில் படித்து கொண்டிருந்தபோது, எனது அம்மாவையும், அப்பாவையும் எதிரிகள் அடித்து விட்டதாக கேள்விப்பட்டேன். இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.05.2020 அன்று காலை 06.00 மணிக்கு எங்கள் வீட்டின் முன்பு நான் நின்று கொண்டிருந்தபோது

எதிரிகள் எனது அம்மாவைப் பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. எதிரி மாரியப்பன் கம்பை எடுத்து எனது அம்மாவின் இடது முழங்கையில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் பொன்னுத்தாய், குமார் ஆகியோர்கள் கையால் எனது அம்மாவை அடித்து கீழே தள்ளினார்கள் என்றால் சரியல்ல. அதை தடுக்கப்போன எனது அப்பாவை எதிரிகள் அசிங்கமாக பேசி, கம்பால் இடது கையில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நானும், எனது அண்ணன் மாணிக்கம், சொர்ணம் ஆகியோர்கள் சத்தம் போடவும் எதிரிகள் எனது அப்பா, அம்மாவை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.10.09
11:17:33 +0530